முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.10/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.20/2016**

காளிமுத்து ... மனுதாரர்/வாதி

/எதிர்/

நவநீதகிருஷ்ணன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 29.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ரமேஷ்வரன் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 16, 17–ன்படி, இம்மனுவில் கண்டபடி சீர்திருத்தங்களை செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், வாதி பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கில் பிராதில் தபசில் சொத்தை வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவண தேதியை 03.06.2013

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:53:19 +0530

என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 20.06.2013 என்றும், அதேபோல் பிரதிவாதி கணபதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் கிரைய தேதி 12.11.2013 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 07.12.2013 என்றும் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், அதே சமயத்தில் ஆதரவு விபரத்தில் மேற்படி இரு ஆவணங்களின் கிரைய தேதி சரியாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆதலால் வழக்குரையில் தவறாக தட்டச்சு செய்யப்பட்ட தேதிகளை திருத்தம் செய்துகொள்ளவேண்டியது நீதியின் பொருட்டும் நியாயத்தின் பொருட்டும் மிகவும் அவசியமாய் உள்ளது என்றும், ஆகையால், இம்மனுவில் கண்டபடி சீர்திருத்தங்களை செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியானதல்ல என்றும், இந்த வழக்கின் வாதி பிராதின் சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே வாதி வழக்கின் சங்கதிகளை படித்துப் பார்த்தும் உண்மையென்று சரிபார்த்தே பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்திற்கு பின் அதை வாதி படித்து பார்த்து புரிந்து கொண்டே இந்த வழக்கில் சாட்சிய விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்பு பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சங்கதிகளை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும், தற்போது வாதி தரப்பு சாட்சியம் முடிந்து வாதியை பிராதில் சொல்லியுள்ள தேதிகளின் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது பிரதிவாதி தரப்பு சாட்சியமும் முதல்நிலை விசாரணையும் முடிவு பெற்றுவிட்டது என்றும், இந்நிலையில், வாதி இவ்வழக்கின் விசாரணையில் இந்த பிரதிவாதியின் எதிர்வாதத்திற்கு குந்தகம் ஏற்படுத்துவதற்கும் பிரதிவாதிகளின் எதிர்வாதத்தை நீர்த்து போக செய்வதற்கும் இந்த மனுவை தாக்கல் செய்து சீர்திருத்தம் கோருகிறார் என்றும், இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் பெறப்பட்ட சங்கதிகள் இந்த சீர்திருத்தத்தால் பாதிக்கப்படும் என்றும், சீர்திருத்தம் சிவில் நடைமுறைச் சட்டம் அமுலுக்கு வந்தபின் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட காலத்திற்கு பின்பு வழக்கின் முதன்மை சங்கதிகள் குறித்து சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க இயலாது என்பது சட்டநிலைபாடாகும் என்றும், தற்போது வாதி தாக்கல் செய்திருக்கின்ற சீர்திருத்தத்தை அனுமதித்தால்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:53:29 +0530

ஒட்டுமொத்த பிராதின் வழக்கின் வியாஜ்ஜிய மூலம் பொருண்மை சங்கதிகள் அனைத்தும் அசல் வழக்கின் சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக மாறுபட்டு நிற்கும் என்றும், அதனால் இந்நீதிமன்றம் ஏற்கனவே செய்யப்பட்ட சாட்சிய விசாரணையின் அடிப்படையில் தீர்வு முடிவு எட்ட இயலாது என்றும், எனவே வாதி தாக்கல் செய்திருக்கின்ற சீர்திருத்தம் அசல் வழக்கின் தன்மையையும் வாதங்களையும் பாதிக்கும் என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டியது நீதியின் பொருட்டும், தகமை நெறியின் அடிப்படையிலும் அவசியமான ஒன்றாகும் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது இம்மனுவில் கண்டபடி சீர்திருத்தங்களை செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது வாதி பிராதின் தபசில் சொத்தை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ அவரது வாரிசுகளோ, வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிரதிவாதி பிரஸ்தாபிக்கும் 07.12.2013 தேதிய கிரைய ஆவணம் எண்.3480/2013 கிரைய ஆவணம் ஒரு Void ஆவணம் என விளம்புகை செய்து, அவ்விதம் இந்நீதிமன்றம் விளம்புகை செய்யும் தீர்ப்பாணை நகலை கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி ஆவணம் செல்லக்கூடியதல்ல என்ற

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:53:36 +0530

பதிவை மேற்கொள்ள தகுந்த உத்தரவிடக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) இம்மனுவில் மனுதாரரால் பிராதில் தபசில் சொத்தை வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவண தேதியை 03.06.2013 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 20.06.2013 என்றும், அதேபோல் பிரதிவாதி கணபதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் கிரைய தேதி 12.11.2013 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 07.12.2013 என்றும் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், அதே சமயத்தில் ஆதரவு விபரத்தில் மேற்படி இரு ஆவணங்களின் கிரைய தேதி சரியாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரரின் மனுவை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் வாதி தரப்பு சாட்சியம் முடிந்து வாதியை பிராதில் சொல்லியுள்ள தேதிகளின் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது பிரதிவாதி தரப்பு சாட்சியமும் முதல்நிலை விசாரணையும் முடிவு பெற்றுவிட்டது என்றும், இந்நிலையில், வாதி இவ்வழக்கின் விசாரணையில் இந்த பிரதிவாதியின் எதிர்வாதத்திற்கு குந்தகம் ஏற்படுத்துவதற்கும் பிரதிவாதிகளின் எதிர்வாதத்தை நீர்த்து போக செய்வதற்கும் இந்த மனுவை தாக்கல் செய்து சீர்திருத்தம் கோருகிறார் என்றும், இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் பெறப்பட்ட சங்கதிகள் இந்த சீர்திருத்தத்தால் பாதிக்கப்படும் என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவண தேதி 03.06.2013 என்பதும், அதேபோல் பிரதிவாதி கணபதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் கிரைய ஆவணத்தின் கிரைய தேதி 12.11.2013 என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

10) ஆனால், மனுதாரர் இம்மனுவை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, சுமார் 9 ஆண்டுகள் கடந்த பிறகு வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து, பிரதிவாதி தரப்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:53:43 +0530

சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்பட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

11) இந்நிலையில் இந்நீதிமன்றமானது, " Rani Vs. Dhanalakshmi Ammal & others, 2018(3) TNLJ Civil 598" என்ற முன்தீர்ப்பினை பார்வையிட்டபோது மேற்படி வழக்கில் நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> *"14) The power of the Court to allow the amendment is very wide and can be exercised at any stage of the proceeding. The Court should adopt a liberal approach in allowing the amendment and the amendment should not be disallowed on hyper technical grounds. The power is entirely discretionary to be used judiciously on a consideration of the facts and circumstances of each case. The rule allows at any stage all amendments which satisfy the two conditions (a) of not working injustice to the other side, and(b) of being necessary for the purpose of determining the real questions in controversy between the parties. If the amendment changes the cause of action or introduces a new case, the amendment should not be allowed.*
>
> *15) As for the first part of the provision, the law permits a party to amend his pleadings which are essential for determining the real question in controversy between the parties and as far as this part is concerned, the Courts are to liberally approach the matter."*

12) மேற்கண்ட நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின்படி ஒரு வழக்கின் விசாரணை எந்த கட்டத்திலிருந்தாலும் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை வழங்க கூடிய அதிகாரம் நீதிமன்றத்திற்குள்ளது. வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை எளிமையான அணுகுமுறையில் பரிசீலிக்க

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:53:52 +0530

வேண்டும். அந்தந்த வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலையின் அடிப்படையில் தனக்குள்ள உளத்தேர்வு அதிகாரத்தை நீதிமன்றம் பயன்படுத்த வேண்டும். அந்த திருத்தமானது a) மறு தரப்பினர்களுக்கு அநீதியை ஏற்படுத்தாது மற்றும் b) வழக்கு தரப்பினர்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு அந்த திருத்தம் அவசியமானது என்கிற இரண்டு காரணங்களின் அடிப்படையில் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை அந்த வழக்கு எந்த கட்டத்தில் இருந்தாலும் நீதிமன்றம் அனுமதிக்கலாம் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

13) மேற்கண்ட நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி பரிசீலிக்கும்போது, பிராதில் தபசில் சொத்தை வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவண தேதியை 03.06.2013 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 20.06.2013 என்றும், அதேபோல் பிரதிவாதி கணபதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் கிரைய ஆவணத்தின் கிரைய தேதி 12.11.2013 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 07.12.2013 என்றும் வாதி குறிப்பிட்டிருப்பது தட்டச்சு பிழை காரணமாக ஏற்பட்ட தவறு என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

14) மேற்கண்ட நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின்படியும், மனுதாரரால் இம்மனுவில் கோரப்பட்டுள்ள திருத்தங்கள் இவ்வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்மானிக்க அவசியமானது ஆகும். மேலும், இம்மனுவானது அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை. வழக்கின் தன்மையை எந்த விதத்திலும் மாற்றப்போவதில்லை.

15) மேலும், அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையே எழுப்பப்பட்டுள்ள கட்சிகளின்படியும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனை முற்றிலுமாக தீர்மானிக்கவும், மேலும் தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:54:00 +0530

இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) இருப்பினும், இம்மனுவானது மிகவும் காலதாமதமாக வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

17) **<u>இறுதியாக:—</u>**

இம்மனுவானது ரூ.2000/— (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 11.09.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 11.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:54:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :—**

— இல்லை —

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.03 16:54:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.10/2025
in
O.S.No.20/2016
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 03.09.2025**